சென்னை மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலரின் செயல்முறைகள், சென்னை-08

ந.க.எண். 4105/ஆ6/2022 நாள்: .08.2022

பொருள்: பள்ளிக் கல்வி - சென்னை மாவட்டம் - 44 வது சர்வதேச செஸ் ஒலிம்பியாட்டின் தொடக்க நாள் நிகழ்வு 28.07.2022 அன்றைய ஒருநாள் உள்ளூர் விடுமுறையை ஈடு செய்யும் வகையில் 27.08.2022 அன்று பணி நாளாக அனைத்து பள்ளிகளும் செயல்படும் என அறிவித்தல் - தொடர்பாக.

பார்வை: அரசாணை (வாலாயம்) எண். 2986, பொது பல்வகைத் துறை நாள். 25.07.2022.

பார்வையில் காணும் அரசாணையின்படி 44வது சர்வதேச செஸ் ஒலிம்பியாட்டின் தொடக்கநாள் நிகழ்வு 28.07.2022 அன்று ஒருநாள் அரசு உள்ளூர் விடுமுறை அறிவித்ததால் அவ்விடுமுறையை ஈடு செய்யும் வகையில் 27.08.2022 அன்று பணிநாளாக அரசு அறிவித்தது.

எனவே அரசு / அரசு உதவி பெறும் பள்ளிகளில் 1ஆம் வகுப்பு முதல் 10 ஆம் வகுப்பு வரை கற்பிக்கும் ஆசிரியர்கள் 27.08.2022 அன்று நடைபெறும் வட்டார வளமைய கூட்டத்தில் பங்கேற்க உள்ளதால் 1 -ஆம் வகுப்பு முதல் 10 ஆம் வகுப்பு வரை மாணவர்களுக்கு வகுப்புகள் இல்லை. ஆனால் முதுகலை ஆசிரியர்களுக்கு வட்டார வளமைய கூட்டம் இல்லாததால் 11ஆம் வகுப்பு மற்றும் 12 ஆம் வகுப்பு மாணவர்களுக்கு வகுப்புகள் நடைபெறும் . எனவே 11 மற்றும் 12 ஆம் வகுப்பு மாணவர்கள் பள்ளிகளுக்கு வருகை புரிய வேண்டும் என அனைத்து அரசு / அரசு உதவி பெறும் பள்ளிகளின் தலைமையாசிரியர்களுக்கு தெரிவிக்கப்படுகிறது.

26.8.22

முதன்மைக் கல்வி அலுவலர்

சென்னை

பெறுநர்

1. அனைத்து அரசு / அரசு உதவி பெறும் பள்ளித் தலைமையாசிரியர்கள் சென்னை மாவட்டம்.
2. அனைத்து மாவட்டக் கல்வி அலுவலர்கள், சென்னை மாவட்டம்
3. அனைத்து வட்டாரக் கல்வி அலுவலர்கள் , சென்னை மாவட்டம்